ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

# திருமங்கையாழ்வார் அருளிச்செய்த
# ॥ கலங்க ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ‖ கலங்க ‖

## திருநறையூர் - 2

‡கலங்க முந்நீர் கடைந்து⋆ அமுதம் கொண்டு⋆ இமையோர்
துலங்கல் தீர⋆ நல்கு சோதிச் சுடராய⋆
வலங்கையாழி இடங்கைச் சங்கம்⋆ உடையான் ஊர்⋆
நலங்கொள் வாய்மை⋆ அந்தணர் வாழும் நறையூரே (1)

முனையார் சீயம் ஆகி⋆ அவுணன் முரண் மார்வம்⋆
புனை வாள் உகிரால்⋆ போழ் பட ஈர்ந்த புனிதன் ஊர்⋆
சினையார் தேமாஞ்செந்தளிர் கோதிக்⋆ குயில் கூவும்⋆
நனையார் சோலை சூழ்ந்து⋆ அழகாய நறையூரே (2)

ஆனைப் புரவி⋆ தேரொடு காலாள் அணி கொண்ட⋆
சேனைத் தொகையைச் சாடி⋆ இலங்கை செற்றான் ஊர்⋆
மீனைத் தழுவி வீழ்ந்தெழும்⋆ மள்ளர்க்கலமந்து⋆
நானப் புதலில்⋆ ஆமை ஒளிக்கும் நறையூரே (3)

உறியார் வெண்ணெய் உண்டு⋆ உரலோடும் கட்டுண்டு⋆
வெறியார் கூந்தல் பின்னை பொருட்டு⋆ ஆன் வென்றான் ஊர்⋆
பொறியார் மஞ்ஞை⋆ பூம் பொழில் தோறும் நடம் ஆட⋆
நறு நாண்மலர்மேல்⋆ வண்டிசை பாடும் நறையூரே (4)

விடையேழ் வென்று⋆ மென் தோள் ஆய்ச்சிக்கன்பனாய்⋆
நடையால் நின்ற⋆ மருதம் சாய்த்த நாதன் ஊர்⋆
பெடையோடன்னம்⋆ பெய்வளையார் தம் பின் சென்று⋆
நடையோடியலி⋆ நாணி ஒளிக்கும் நறையூரே (5)

பகுவாய் வன் பேய் கொங்கை சுவைத்து⋆ ஆர் உயிர் உண்டு⋆
புகுவாய் நின்ற⋆ போதகம் வீழப் பொருதான் ஊர்⋆
நெகு வாய் நெய்தல்⋆ பூ மது மாந்திக் கமலத்தின்⋆
நகுவாய் மலர்மேல்⋆ அன்னம் உறங்கும் நறையூரே (6)

www.prapatti.com

முந்து நூலும் முப்புரி நூலும்⋆ முன்னீந்த⋆
அந்தணாளன் பிள்ளையை⋆ அஞ்ஞான்றளித்தான் ஊர்⋆
பொந்தில் வாழும்⋆ பிள்ளைக்காகிப் புள்ளோடி⋆
நந்து வாரும்⋆ பைம் புனல் வாவி நறையூரே (7)

வெள்ளைப் புரவித் தேர் விசயற்காய்⋆ விறல் வியூகம்
விள்ள⋆ சிந்துக்கோன் விழ⋆ ஊர்ந்த விமலன் ஊர்⋆
கொள்ளைக் கொழு மீன் உண்⋆ குருகோடிப் பெடையோடும்⋆
நள்ளக் கமலத் தேறல் உகுக்கும்⋆ நறையூரே (8)

பாரையூரும் பாரம் தீரப்⋆ பார்த்தன் தன்
தேரையூரும்⋆ தேவதேவன் சேரும் ஊர்⋆
தாரையூரும்⋆ தண் தளிர் வேலி புடை சூழ⋆
நாரையூரும்⋆ நல் வயல் சூழ்ந்த நறையூரே (9)

‡தாமத் துளப⋆ நீள் முடி மாயன் தான் நின்ற⋆
நாமத் திரள் மா மாளிகை சூழ்ந்த⋆ நறையூர் மேல்⋆
காமக் கதிர் வேல் வல்லான்⋆ கலியன் ஒலி மாலை⋆
சேமத் துணையாம்⋆ செப்பும் அவர்க்குத் திருமாலே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com